# தமிழகக் கதைகள்

(சங்க காலம்)



ஓரியன்ட் பப்ளிஷிங் கம்பெனி

# தமிழகக் கதைகள்

(சங்க காலம்)

## ஐந்தாம் வகுப்புக்கு உரியது

ஆசிரியர்
டாக்டர். மா. இராசமாணிக்கனார்,
M.A., L.T, M.O.L., PH. D,

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001

ஓரியன்ட் பப்ளிஷிங் கம்பெனி
3. கொண்டிசெட்டித் தெரு, சென்னை—1

காபிரைட்] [விலை 60 ந. பை.

முதற் பதிப்பு 1959
நான்காம் பதிப்பு 1961

Approved by the T. B. C. Page 17 F. S. G.
Gazette dated 18-5-60

ஸ்ரீநிவாஸ் பிரிண்டிங் பிரஸ், சென்னை-1.

# முகவுரை

தமிழகக் கதைகள் என்னும் பெயருடன் வெளி வரும் இச்சிறு நூல் ஐந்தாம் வகுப்புக்கு உரிய துணைப் பாட நூலாகும். சங்ககால இலக்கியம் என்று சொல்லப் படும் புறநானூறு முதலிய நூல்களில் கூறப் பட்டுள்ள நிகழ்ச்சிகள் சில இங்குக் கதை உருவில் எழுதப்பட்டுள்ளன. இலக்கிய நிகழ்ச்சிகள் கதை வடிவத்தில் எழுதப்படல் வேண்டும் என்பது புதிய பாடத் திட்டத்தின் கருத்தாகும். அக்கருத்தை உளங்கொண்டே இக்கதைகள் எளிய நடையில எழுதப்பட்டுள்ளன. சிறுவர் உலகம் இந்நூலைப் பயன்படுத்திக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

மா. இராசமாணிக்கனார்

# உள்ளுறை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஒற்றுமை வேண்டிய புலவர் ... | 1 |
| 2. | தூது சென்ற அம்மையார் ... | 4 |
| 3. | அறிவுடை நம்பி ... | 7 |
| 4. | புலவர் கட்டுப்பாடு ... | 10 |
| 5. | பெருஞ்சித்திரனார் ... | 13 |
| 6. | கதவு அடைத்த கருமி ... | 16 |
| 7. | நீதி தவறாத மன்னன் ... | 19 |
| 8. | போரைத் தடுத்த புலவர் ... | 22 |
| 9. | தலைவழங்க முன்வந்தவன் ... | 25 |
| 10. | உள்ளம் ஒன்றுபட்ட நண்பர்கள் ... | 28 |
| 11. | வெளிமான் ... | 32 |
| 12. | இளவிச்சிக்கோ .... | 34 |
| 13. | கொலை தவிர்த்த புலவர் ... | 37 |
| 14. | புலவர்க்குப் புலவர் உதவி ... | 40 |
| 15. | போர்க்களத்தில் புலவர் ... | 43 |
| 16. | வீராயியின் வீரம் .... | 46 |
| 17. | அரசு துறந்த இளங்கோ ... | 49 |
| 18. | சேரன் செங்குட்டுவன் ... | 52 |
| 19. | வடநாட்டில் போர் ... | 55 |
| 20. | பத்தினிக் கடவுள் ... | 58 |

# 1. ஒற்றுமை வேண்டிய புலவர்

தமிழ்நாட்டில் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்ற மூன்று நாடுகள் இருந்தன. அவற்றைச் சேரர், சோழர், பாண்டியர் என்ற முடிமன்னர் மூவர் ஆண்டுவந்தனர். ஒவ்வொருவருக்கும் அடங்கிய சிற்றரசர் சிலர் இருந்தனர். முடிமன்னர் மூவரும் ஒரு சமயம் ஒற்றுமையாக இருப்பர்; ஒரு சமயம் போர் புரிவர். சில காலங்களில் ஒருவரை ஒருவர் வென்று அடக்குவர். சில சமயங்களில் மூவருள் ஒருவர் மற்ற இருவரையும் அடக்கிப் பேரரசராக விளங்குவதும் உண்டு.

சங்க காலத்தில் சோழன் **கரிகாலன்** சேரனையும் பாண்டியனையும் வென்று பேரரசனாய் விளங்கினான். பாண்டியன் **நெடுஞ்செழியன்** சேரனையும் சோழனையும், அவர்களுக்கு உதவியாக வந்த சிற்றரசர் ஐவரையும் வென்று பேரரசனாய்த் திகழ்ந்தான். சேரன் **செங்குட்டுவன்** என்பவன் தன் காலத்தில் பேரரசனாய் இருந்தான். இத்தகைய சூழ்நிலையில் முடிமன்னர் மூவரும் பெரும்பாலும் ஒற்றுமையாய் இருந்ததில்லை.

தமிழ்நாட்டில் வாழ்ந்த முடிமன்னர் மூவர் ஒற்றுமையில்லாது இருந்தமைக்குப் புதியவர்

பலர் செய்த சூழ்ச்சியே காரணமாகும். தமிழ்ப் புலவர்கள் தமிழரசரது ஒற்றுமையை விரும்பினர்; சமயம் வரும்பொழுது ஒற்றுமை பற்றி அறிவுறுத்தினர்.



ஒரு சமயம் **பெருநற்கிள்ளி** என்பவன் சோழ நாட்டை ஆண்டு வந்தான். அப்பொழுது **மாரிவெண்கோ** என்பவன் சேர நாட்டை ஆண்டுவந்தான்; **உக்கிரப்பெருவழுதி** என்பவன் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான்; பெருநற்கிள்ளியின் அரண்மனையில் இராசசூய யாகம் நடந்தது. அப்பொழுது சேரனும் பாண்டியனும் அங்கு வந்திருந்தனர். தமிழ் நாட்டுப் புலவர் பலர் அங்குக் கூடி இருந்தனர். அவருள் **ஔவையார்** ஒருவர்.

மூவேந்தரும் ஔவையாரிடம் முக மலர்ச்சியுடன் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது ஔவையார் அவர்களை மகிழ்ச்சியோடு பார்த்தார்; "அரசர் பெருமக்களே, உங்கள் மூவரையும் ஓரிடத்தில் காண நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் கூட்டுறவால் தமிழ்நாடு பெருமை அடையும்; தமிழர் மனம் மகிழ்வர்; பிறநாட்டுமன்னர் அஞ்சுவர்; நீங்கள் இன்றுபோல் என்றும் மன ஒற்றுமையோடு வாழவேண்டும். அங்ஙனம் வாழ்தலையே என் போன்ற புலவர் விரும்புவர். ஒன்றுபட்ட உங்களைப் பிறர் வெல்லுதல் அரிது. ஒற்றுமையே பலம் தரும்," என்று கூறினர்.

அவரது பேச்சு மூவேந்தரையும் மகிழ்வித்தது. அவர்கள் அவர் நல்லுரைப்படி நடப்பதாக உறுதி கூறினர்கள்.


## 2. தூது சென்ற அம்மையார்

காஞ்சீபுரம் தொண்டை நாட்டின் தலை நகர். **தொண்டைமான்** என்பவன் அதனை ஆண்டு வந்தான். அவன் போர் செய்து பழக்கம் பெறுதவன். அவனுடைய போர்க் கருவிகள் புதியனவாக அரண்மனையில் வைக்கப்பட்டு இருந்தன. அவன் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்தான். அவனுடைய நல்ல குணங்களைப் புலவர்கள் பாராட்டிப் பாடினார்கள்.

தகடூரை ஆண்ட **அதியமான்** நல்ல குணங்களை உடையவன். அவன் சிறந்த வீரன்; போர் செய்வதில் வல்லவன்; பல போர்கள் செய்து வெற்றி பெற்றவன் ஔவையார் அவன் ஆதரவில் இருந்து வந்தார். அவன் ஔவையாரைத் தன் உயிரினும் மேலாக மதித்தான்; அவருடைய அறிவு மொழிகளைக் கேட்டு நடந்துவந்தான்.

தொண்டைமான் அதியமான் புகழைக் கேட்டுப் பொருமை அடைந்தான்; அதியமானைப் போரில் எதிர்த்து அவன் புகழை அழிக்க விரும்பினான். இந்தச் செய்தி அதியமானுக்கு எட்டியது. அவன் மிக்க கோபம் கொண்டான்; ஔவையாரிடம் இது பற்றிச் சொன்னான்.

ஔவையார் அதியமானை நோக்கினர்; "அரசே, நீ கோபம் கொள்ளாதே. கோபம் பல குற்றங்களைத் தூண்டவல்லது. இப்படியே பொருமையும் பல குற்றங்களுக்கு அடிப்படையானது. பிறரிடம் பொருமை கொண்டவர் உருப்பட்டதில்லை. பொருமை கொள்பவர் தாமே அழிவர். நான் தொண்டைமானைப் பார்க்க விரும்புகிறேன். உங்கள் இருவருக்கும் போர் நடக்கலாகாது," என்று அன்புடன் கூறினர்.



ஔவையார் காஞ்சி நகருக்குச் சென்ருர். தொண்டைமான் அவரைச் சிறப்பாக வரவேற்ருன்; அவருக்கு அறுசுவை உண்டி வழங்கினன். அரசமாதேவியரும் ஔவை

யாரை உபசரித்தனர். தொண்டைமான் ஔவையாரை அழைத்துச் சென்று தன் போர்க் கருவிகளைக் காட்டினன். அங்கிருந்த போர்க்கருவிகள் எல்லாவற்றையும் ஔவை யார் பார்வையிட்டார்; புன்னகையோடு தொண்டைமானைப் பார்த்தார்.

"மன்னனே, உன் போர்க் கருவிகள் மிகவும் அழகானவை; துருப் பிடியாமல் இருக்க நெய் பூசப்பெற்றவை; மயிற்பீலி அணியப்பெற்றவை. இவை மிகவும் ஒழுங் காக வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அதிய மானின் போர்க் கருவிகள் அரண்மனையில் இல்லை. அவை போரில் ஈடுபட்டன; ஆத லால் அவற்றின் ஓரமும் நுனியும் மழுங்கி விட்டன; கொல்லனது உலைக்களத்தில் பழுது பார்க்கப் போடப்பட்டிருக்கின்றன," என்று ஔவையார் கூறினர். தொண்டை மான் போர்ப் பழக்கம் இல்லாதவன். அதிய மான் போர்ப் பழக்கம் உடையவன். 'அவனை எதிர்த்தாலும் தோல்வி அடைவது உறுதி' என்பதையே ஔவையார் மறைமுகமாக இவ்வாறு கூறினர். தொண்டைமான் ஔவையார் கூறியதன் பொருளை உணர்ந்து கொண்டான். போர் நடைபெறவில்லை. ஔவையாரது பேச்சுத் திறமையைப் பாருங் கள்!

# 3. அறிவுடை நம்பி

மதுரை பாண்டிய நாட்டின் தலைநகரம். அதனைப் பாண்டிய மன்னர்கள் ஆண்டுவந்தார்கள். அவருள் **அறிவுடை நம்பி** என்பவன் ஒருவன். அவன் உண்மையாகவே அறிவுடையவன்; தமிழ் நூல்களை நன்கு கற்றவன்; செய்யுள் செய்யும் ஆற்றல் பெற்றவன்; தமிழ்ப் புலவர்களிடம் மிக்க மதிப்புடையவன்.

அவன் குழந்தைகளிடம் மிக்க அன்புடையவன்; குழந்தைகளின் செயலை நன்கு கவனித்தவன்; "சிறு பிள்ளைகள் தத்தித் தத்தி நடப்பார்கள்; மழலைச் சொற்களைப் பேசுவார்கள்; தம் சிறிய கைகளை நீட்டுவார்கள்; பெற்றோர்கள் உண்ண இருக்கும் உணவைத் தம் கைகளால் பிசைவார்கள்; சோற்றை இறைப்பார்கள்; அதனைத் தம் வாயில் போட்டுக்கொள்வார்கள்; எச்சில் கைகளால் பெற்றோரைத் தழுவுவார்கள். இவற்றைக் கண்டு பெற்றோர் கோபம் கொள்ளார்; தம் பிள்ளைகள் மீது அன்பையே சொரிவர். கள்ளம் கபடு அற்ற பிள்ளைகளைப் பெறுதவர் எவ்வளவு பணம் படைத்தவர் ஆயினும், வாழ்க்கை இன்பம் பெறுதவரே ஆவர்," என்பது அறிவுடை நம்பியின் கருத்து. அவன் இக்கருத்தை வைத்து ஒரு பாடல் பாடியிருக்கிறான்.

பாண்டிய நாட்டில் கடற்கரை ஓரத்தில் பிசுக்குடி என்று ஓர் ஊர் இருக்கிறது. அதனில் **ஆந்தையார்** என்ற ஒரு புலவர் இருந்தார். அவர் குணங்களால் சிறந்தவர்; சோழ நாட்டை ஆண்ட கோப்பெருஞ் சோழனுக்கு நண்பர்; அவர் அறிவுடை நம்பியுடன் நெருங்கிப் பழகினர்; அவனிடம் மிக்க மதிப்புக் கொண்டிருந்தார்.



பாண்டியனிடம் வேலைபார்த்த அரசாங்க ஊழியருள் குடிகளிடம் வரி வாங்குவோரும் இருந்தனர். அவருள் சிலர் பிசுக்குடி முதலிய ஊர் மக்களை வருத்தி வரி வாங்கினர்; ஒன்றும் விளையாத நிலத்திற்கும் குடிமக்களைத் துன்புறுத்தி வரி வசூலித்தனர். இதனல் குடிகள் மனம் வருந்தனர்; அரசனது ஆட்சி

யைப் பழித்துப் பேசினர் ; பிசிர் ஆந்தையார் குடிகளது வருத்தத்தை உணர்ந்தார்; நேரே அரசனைச் சென்று கண்டார்.

அறிவுடைநம்பி புலவரை வழக்கம்போல முகமலர்ச்சியோடு வரவேற்றான். புலவர் அவனைப் பார்த்து, "அரசே, நிலம் மிகச் சிறியது. ஆயினும் அதில் விளைந்த நெல் பாதுகாக்கப் பட்டால் யானைக்குப் பல நாள் உணவாகும். ஆனால் அந்த நெல்லை யானை தானே புகுந்து உண்ணத் தொடங்கினால், அது உண்ணும் நெல்லைவிடப் பலமடங்கு அதிகமான நெல் அதன் காலில் மிதிபட்டுக் கெட்டுவிடும். அது போலவே அறிவுடைய அரசன் வரி வாங்கும் முறையை அறிந்து வாங்கினால், குடிகள் மகிழ்ச்சியோடு வரியைக் கொடுப்பர் ; தாமும் வயிறார உண்பர். அன்பு கெடும்படி குடிகளை வருத்தி வரி வாங்கினால், யானை புகுந்த வயல் போல வரியும் கிடைக்காது—குடிகளும் துன்பப்படுவர்," என்று தெளிவாக எடுத்துக் கூறினார்.

பாண்டியன் உண்மையை உணர்ந்தான்; குடிகளை வருத்தி வரி வாங்கிய தன் அலுவலரைத் தண்டித்தான் ; புலவர் கூறிய முறைப்படியே வரி வாங்கும்படி கட்டளை இட்டான். குடிகள் புலவரையும் மன்னனையும் மனமார வாழ்த்தினர்.

# 4. உள்ளம் ஒன்றுபட்ட நண்பர்கள்

சோழ அரசருள் **கோப்பெருஞ்சோழன்** என்பவன் ஒருவன். அவன் குடிகளுக்குத் தாய் போன்றவன் ; தெய்வ பக்தி உடையவன்; கற்றோரை மதிப்பவன் ; குடிகளுக்கு நன்மை செய்வதிலேயே கண்ணும் கருத்தும் கொண்டவன்; நல்ல நெறியிலிருந்து விலகாதவன்.

அவன் எப்பொழுதும் தமிழ்ப் புலவர்களோடு பொழுது போக்குவான். புலவர்கள்பல நாட்டுச் செய்திகளை அவனுக்குக் கூறுவர். அவன் அவற்றைக் கேட்டு மகிழ்வான். அவர்களது கூட்டுறவால் அவனது அறிவு வளர் பிறை போல வளர்ந்துவந்தது. அவன் அவர்களுக்கு உணவும் உடையும் செல்வமும் வழங்கினான். புலவர்கள் அவனை மனமார வாழ்த்தினர். அவன் புகழ் மூன்று தமிழ் நாடுகளிலும் பரவியது.

பாண்டிய நாட்டுக் கடற்கரையில்இருந்த ***பிசிர்*** என்ற ஊரில் வாழ்ந்த **ஆந்தையார்** என்ற புலவர் மிகவும் நல்லவர் ; நன்கு படித்தவர். அவர் சோழனது புகழைக் கேள்விப்பட்டார்; அவனைச் சென்று காண விரும்பினார். எக்காரணத்தாலோ அவர் சோழநாடு செல்ல முடியவில்லை ; அவனை நினைந்து நினைந்து

ஏங்கினர் ; அவனுடைய நல்ல குணங்களைப் பாடிப் பாடி மகிழ்ந்தார்.

கோப்பெருஞ் சோழனுக்குப் பிள்ளைகள் இருவர் இருந்தனர்; அவர்கள் கொடியவர்கள்; தந்தையைக் கொன்று நாட்டை ஆள விரும்பினர்கள் ; அதனை அறிந்த மன்னன் மனம் நொந்தான்; அரசைத் துறந்தான். காவிரியாற்றுத் திட்டு ஒன்றில் சென்று தங்கினன் ; 'உண்ணு நோன்பு' இருந்து உயிர்விடத் துணிந்தான். அவனோடு பழகிய புலவர்கள் அப்பொழுதும் அவனுடன் இருந்தனர் ; அவனுக்கு ஆறுதல் மொழிகளைக் கூறினர்.

கோப்பெருஞ் சோழன் பிசிராந்தையார் புலமையைக் கேள்விப்பட்டான்; அவரைப் பார்க்கவேண்டும் என்று பல முறை விரும்பினன். அவர் தன்மீது கொண்டிருந்த அன்பைக் கேள்விப்பட்டான்; இறக்கும் சமயத்திலாவது அவரைப் பார்க்கவேண்டும் என்று அவன் மனம் துடித்தது. அப்பொழுது அவர் எப்படியும் அங்கு வருவார் என்று அவனது உள் உணர்ச்சி தெரிவித்தது. அவன் தன் உணர்ச்சியைப் புலவர்களிடம் தெரிவித்தான்.

ஆந்தையார் கோப்பெருஞ் சோழனது நிலைமையை எவ்வாறே அறிந்தார்; துடிதுடித்துக்கொண்டு உறையூரை நோக்கி ஓடிவந்தார்; முடிவில் காவிரியாற்றுத் திட்டை அடைந்தார்;

உயிர்விடும் நிலையிலிருந்த அரசனைக் கண்டார்; அவனை அன்போடு தழுவிக்கண்ணீர்விட்டார். முன்பு பழகாத அந்த இருவரும் ஒருவர்மீது



ஒருவர் காட்டிய அன்பைக் கண்ட பிற புலவர்கள் வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டனர்; "உண்மை நட்பு இதுவல்லவா!" என்று பாராட்டினர்.

கோப்பெருஞ் சோழனுக்குப் பக்கத்திலேயே ஆந்தையாரும் உண்ணாவிரதம் இருந்தார். அப்பெருமக்கள் இருவரும் மிக்க மன மகிழ்ச்சியோடு உயிரைவிட்டனர். அவர்களது உண்மை நட்பைத் தமிழ் மக்கள் இன்றளவும் பாராட்டி வருகிறார்கள்.


# 5. புலவர் கட்டுப்பாடு

ஏறத்தாழ ஆயிரத்து எண்ணூறு ஆண்டு கட்குமுன் தமிழ் நாட்டில் **நன்னன்** என்ற சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு பெரிய தோட்டத்தை வைத்திருந்தான்; அத் தோட்டத்தில் மா, பலா, வாழை மரங் களும், மல்லிகை, முல்லை, சாமந்தி, பொழுது வணங்கி (சூரிய காந்தி) முதலிய மலர்ச் செடிகளும், மர வகைகளும் இருந்தன. நன்னனே அத் தோட்டத்தை நாளும் கவ னித்து வந்தான். நன்னன் உயர்ந்த எரு வகைகளை இட்டுப் பயிரிட்டதினால் மா, பலா, வாழை முதலியன மிக்க சுவையைத் தந்தன.

அவனது தோட்டத்தைச் சேர்ந்தாற் போல ஒரு வாய்க்கால் இருந்தது. ஒரு நாள் பலமான காற்று அடித்தது. அதனால் சில மாங்காய்கள் கீழே விழுந்தன. அவற்றுள் ஒன்று வாய்க்காலில் விழுந்தது. அப்பொழுது அவ்வாய்க்காலில் ஒரு சிறுமி நீராடிக்கொண் டிருந்தாள்.

அச்சிறுமி அத்தோட்டம் நன்னனுடை யது என்பதை அறியாள். அவள் அந்த மாங் காயை எடுத்துக் கடித்துத் தின்றாள். தோட் டக்காரன் அதனைப் பார்த்துவிட்டான்; அவன் உடனே அரசனிடம் சென்று நடந்ததைக்

கூறினுன். அதைக்கேட்டதும் நன்னன் கண்கள் சிவந்தன. "நான் அரும்பாடுபட்டு வளர்த்த மாமரத்திலிருந்து ஒரு மாங்காய் வாய்க்காலில் விழுந்துவிட்டது. அச் சிறுமி அதனை எடுத்துத் தோட்டத்தினுள் எறிந்திருத்தல் வேண்டும். அது எனது தோட்டம்



என்பதை அறியாதவர் இல்லை. அறிந்தும், சிறிதும் அச்சமில்லாமல் அச் சிறுமி அக் காயைத் தின்றது மன்னிக்கமுடியாத குற்றம். அவளைக் கொல்வதே முறை," என்று முழக்கமிட்டான்.

அச்சிறுமியின் தந்தை மன்னனது முடிவைக் கேள்வியுற்ருன்; உடல் பதற, விழிநீர் வார, மன்னன் முன்வந்து பணிந்தான்;

''மன்னர் பெருமானே, என் மகள் சிறுமி; அது தங்கள் தோட்டம் என்பதை அறியா தவள். தண்ணீரில் தானுக விழுந்த மாங்கா யைத் தின்ருள். அது குற்றமாயின், பொறுத் தருள வேண்டுகிறேன்'', என்று பணிவோடு கூறினன்.

நன்னனது கோபம் குறையவே இல்லை. சிறுமியின் தந்தை மீண்டும் அரசனை வணங் கினன்; ''என் மகள் செய்த தவற்றிற்காக எண்பத்தொரு யானைகளைத் தருவேன்; அவள் நிறையளவு பொன்னுல் செய்த பாவை ஒன்றையும் தருவேன். அவளை மன்னித்து விட்டுவிடுங்கள்,'' என்று அழுது வேண்டி ஞன். நன்னன் மனம் இரங்கவில்லை. அவன் அச் சிறுமியைக் கொன்றுவிட்டான்.

இச் செய்தி தமிழ்நாடு முழுதும் பரவி யது. மூவேந்தரும் சிற்றரசரும் நன்னனது கொடுஞ்செயலை வன்மையாகக் கண்டித்தனர். அவனது கொடுஞ் செயலைக் கேட்ட புலவர் பெருமக்கள் உள்ளம் நடுங்கினர்; அவனை உளமார வெறுத்தனர். அதுவரையில் அவனை மனமாரப் புகழ்ந்த புலவர்கள், இப் பெண் கொலைக்குப் பிறகு அவனைப் பாட விரும்ப வில்லை; அவனைப் பார்க்கவும் விரும்பவில்லை. இவ்வாறு புலவர்கள் கட்டுப்பாடு உடையவ ராய்ப் 'பெண் கொலை புரிந்த நன்னன்'என்று அவனை இகழ்வராயினர்.

## 6. கதவு அடைத்த கருமி

பழைய தமிழ் நாட்டில் வாழ்ந்த பேரரசரும், சிற்றரசரும் தம் தாய் மொழியான தமிழைப் போற்றி வந்தனர்; தம்மைப் பாடிவந்த புலவர்களுக்கு வேண்டியவற்றை உதவினர்; யாழ் முதலிய இசைக் கருவிகளோடு சென்று தம் புகழைப் பாடிய இசைவாணருக்குச் சுவை மிகுந்த விருந்து வைத்து வேண்டியபொருள்களை வழங்கினர்; நடனத்திலும் நாடகத்திலும் வல்ல கூத்தர்க்கு வேண்டும் பரிசுகளை வழங்கினர்.

புலவர்கள் இவ்வாறு முடிமன்னரிடமும் சிற்றரசரிடமும் பெற்றுவந்த செல்வத்தைத் தம் அளவில் வைத்துக்கொண்டதில்லை; சிறிது காலம் தமக்கு வேண்டிய அளவு வைத்துக்கொண்டனர்; மிகுந்தவற்றைத் தம் சுற்றத்தார்க்கு வழங்கினர்; மீண்டும் வறுமை வந்ததும் வள்ளல்கள் உதவியை நாடினர். இவ்வாறு தாம் பெற்ற பொருளைத் தாமும் தம் சுற்றத்தாரும் அநுபவிப்பதையே பழந்தமிழ்ப் புலவர்கள் இன்பமாகக் கருதினார்கள்.

தமிழ்ப் புலவர்கள் உண்மையையே பேசி வந்தார்கள்; தங்கள் வறுமை நிலையை உள்ளது உள்ளபடியே சொல்லி வந்தார்கள்; உண்மையைச் சொல்லி உதவி கேட்டார்கள்;

பரிசு பெற்றுத் திரும்பும்போது வழியில்கண்ட புலவர்களைத் தம்மை ஆதரித்த வள்ளல்களி டம் போகும்படி வற்புறுத்தினார்கள். அவர்கள் பிறருக்கு உதவி செய்வதையே தம் வாழ்வின் நோக்கமாகக் கருதினார்கள்.

முடியுடை மன்னராயினும் தங்களை மரி யாதையுடன் நடத்தினவர்களையே புலவர்கள் மதித்தனர்; மற்றவர்களை மதிக்கவில்லை; தம்மைக் காக்கவைத்துப் பொருளை ஆள்வசம் கொடுத்த அரசரை வன்மையாகக் கடிந்தனர்; காக்க வைத்த காவலரையும் கடிந்துகொண்ட னர்; அவ்வப்போது அரசர்களுக்கு அறிவுரை கூறினர்; நடக்க இருந்த பல போர்களைத் தடுத்தனர்; பல கொலைகளைத் தவிர்த்தனர்.

ஐந்தாம் கதையில் கூறப்பட்ட பெண் கொலை புரிந்த நன்னனது மரபில் ஒரு சிற்றர சன் இருந்தான். அவன் பிறர்க்கு ஒன்றும் கொடுத்து அறியாதவன்; பிறர்க்கு ஒன்றும் கொடுக்க மனம் வராதவன். அவனைக் கருமி யென்றே சொல்லலாம். நன்னன் பெண் கொலை புரிந்த காரணத்தால் பழம் புலவர்கள் அவனையும் அவன் மரபினரையும் பார்ப்பதை விட்டுவிட்டனர்; ஆயினும் வரலாறு தெரி யாத புதிய புலவர் ஒருவர் மேலே சொல்லப் பட்ட கருமியிடம் சென்றார். அவர் தன் அரண்மனை நோக்கி வருவதைத் தூரத்தி லிருந்து அக்கருமி பார்த்தான்; உடனே

வாயிற் காவலரை அழைத்தான்: அரண்மனைக் கதவை மூடும்படி கட்டளையிட்டான்; புலவர் வருவதற்குள் கதவு மூடப்பட்டது. புலவர் மனம் என்ன பாடுபட்டிருக்கும்!



இச்செய்தி புலவர் உலகத்தில் பரவியது. எல்லாப் புலவரும் கடுங்கோபம் கொண்டனர்; இனிப் புலவர் எவரும் நன்னன் மரபினரை மதிக்கக்கூடாது — அவர்களிடம் செல்லக்கூடாது — சென்று பாடக்கூடாது என்று முடிவு செய்தனர்.


# 7. நீதி தவருத மன்னன்

தஞ்சாவூர் மாவட்டத்தில் **திருவாரூர்** என்பது ஒரு நகரம். அது காலத்தாற் பழமையானது. அது ஒருகாலத்தில் சோழர் தலைநகராய் இருந்தது. அங்கு **மநுநீதிச் சோழன்** என்ற மன்னன் ஆண்டுவந்தான். அவனுக்கு நெடுங்காலம் பிள்ளையில்லை; பிறகு ஒரு மகன் பிறந்தான். சோழன் அவனை அன்போடு வளர்த்துவந்தான். அந்த மகன் பெயர் **வீதி விடங்கன்** என்பது.

வீதிவிடங்கன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினுன். அவன் மிகவும் அடக்கமுடையவன்; நல்ல குணங்களை உடையவன். எல்லோரிடமும் அன்பாக நடந்துகொள்பவன். அரசாங்க அலுவலரும் குடிமக்களும் அவனைப் பெரிதும் விரும்பினர்.

ஒருநாள் வீதிவிடங்கன் தன் தேர்மீது ஏறிக்கொண்டு கோவிலைநோக்கிச் சென்ருன். அப்பொழுது அவனுடன் பலர் தெருவழியே சென்றனர். மேள வாத்தியம் ஒலித்தது. பல வகை வெடிகள் விண் அதிரும்படி வெடித்தன. இடி ஓசை போன்ற வெடி ஓசை கேட்டுப் பசுக் கன்றுகள் நாலாப் பக்கங்களிலும் சிதறி ஓடின. அவற்றில் ஒன்று வழி தெரியாமல் கூட்டத்திற் புகுந்தது; முடிவில் தேரின் உருளைக்கடியில் அகப்பட்டுக்கொண்டது. எவரும் அதனைக் கவனிக்கவில்லை. பாவம்! அது தேர் உருளையின் அடியில் அகப்பட்டு இறந்தது.

வீதிவிடங்கன் கன்று இறந்ததை அறிந்தான்; உடனே தேரைவிட்டு இறங்கினான்; இறந்த கன்றைப்பார்த்து மனம் வருந்தினான். அவன் விழிகள் நீரைச் சிந்தின. அப்பொழுது கன்றைத் தேடிக்கொண்டு தாய்ப் பசு அங்கே வந்தது; தன் கன்று இறந்து கிடப்பதைக் கண்டது; கதறியது; அங்கும் இங்கும் ஓடியது; மீண்டும் வந்து கன்றை மோந்து பார்த்தது; முடிவில் அரண்மனையை நோக்கி ஓடியது.



அரண்மனை வாசலில் ஒரு பெரிய மணி கட்டப்பட்டிருந்தது. நாட்டில் குறையேதும் ஏற்பட்டால், அதனை அரசனிடம் தெரிவிக்க

விரும்புவோர் அந்த மணியை அசைப்பர்; மணி ஓசை கேட்ட மன்னவன் அவர்களை அழைத்து விசாரித்துக் குறையைப் போக்கு வான். அந்த மணி 'ஆராய்ச்சி மணி' எனப் பட்டது. கன்றை இழந்த தாய்ப் பசு அந்த ஆராய்ச்சி மணியை அசைத்தது.

மணி ஓசை மன்னவன் காதில் பட்டது. அவன் உடனே ஆட்களை அனுப்பினான். ஆட்கள் திரும்பிச்சென்று பசு வந்த காரணத் தைக் கூறினர். அதுகேட்ட மன்னவன் நெருப்பில் விழுந்த புழுப்போலத் துடித்தான்; தன் மகன் கன்று இறக்கக் காரணமாய்இருந் தான் என்பதை எண்ணி வருந்தினான். அமைச்சர் அவனுக்குச் சமாதானம் கூறினார். அரசன் அவர்கள் சொல்லைக் கேட்கவில்லை.

"என் மகன் பசுவின் கன்றைக் கொன் றான். அதனால் தாய்ப்பசு தவிக்கிறது. அதற்கு நியாயம் வழங்கவேண்டும். அக்கன்று இறந்த இடத்தில் என் மகனைப் படுக்கவைத்து, தேரைச் செலுத்தி, அவனைக் கொல்வதே முறையாகும்," என்று அரசன் அழுத்தமாகக் கூறினான். நீதி தவறாத அவ்வேந்தன் தான் சொன்னபடியே தன் மகனைக் கொன்றான். குடிமக்கள் அவனது நீதிமுறையைப் பாராட்டி மகிழ்ச்சிக் கண்ணீர் விட்டனர். திருவாரூர் மக்கள் இன்றும் இக்கதையைச் சொல்லுகிறார் கள்.

## 8. போரைத் தடுத்த புலவர்


***மோசியார்*** என்பவர் ஒரு புலவர். அவர் சிறந்த கல்வி உடையவர்; உயர்ந்த ஒழுக்கம் உடையவர்; எல்லோரிடமும் அன்பாக நடந்துகொள்பவர்; அனைவரிடமும் மலர்ந்த முகத்துடன் இனிமையாகப் பேசுபவர். அவர் அரசர்களிடம் மதிப்புப் பெற்றவர். புலவர் பலரும் அவரைக் கொண்டாடினர்.

இன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள **கருவூர்** பழைய காலத்தில் சேரர் தலைநகரங்களுள் ஒன்றாய் இருந்தது. அங்கு ஓர் அரண்மனை இருந்தது. அந்த அரண்மனையில் **அந்துவஞ்சேரல் இரும்பொறை** என்ற சேர மன்னன் இருந்தான். அவன் மோசியாரைப் பெரிதும் விரும்பினான். அவர் அவனோடு இருந்து பொழுது போக்கினார்.

அப்பொழுது சோழ நாட்டைப் **பெருநற்கிள்ளி** என்பவன் ஆண்டுவந்தான். அவனது தலைநகர் உறையூர். அவன் சிறந்த கல்வி அறிவு உடையவன்; ஒழுக்கத்தில் சிறந்தவன்; புலவர்களையும், இசைவாணரையும், கூத்தரையும் காப்பாற்றி வந்தவன்; குடிகளுக்குத் துன்பம் வராமல் பாதுகாத்து வந்தவன். கற்றவரும் மற்றவரும் அவனை மனமார வாழ்த்தினர்.

அவன் ஒருநாள் தனது பட்டத்து யானை மீது அமர்ந்து வேட்டையாடச் சென்றான்; காட்டில் நன்றாய் வேட்டையாடினான். அப்

பொழுது அவனது யானைக்குத் திடீரென வெறி உண்டாயிற்று. அது உடனே நிலை கொள்ளாமல் பலவாறு ஓடத் தொடங்கியது. சோழன் அதனை அடக்கப் பாடுபட்டான். வர வர வெறி மிகுதிப்பட்டதால் யானை அடங்க வில்லை. அது திசை தெரியாமல் ஓடியது. அப் படி ஓடின யானை கருவூரை அடைந்தது. சோழன் அது கருவூர் என்பதை அறிந்தான்; திடீரென்று தன்னைக் கண்டவுடன் சேரன் தவருக நினைப்பான் என்று எண்ணினன்; அதனல் யானையை மடக்கி உறையூர் நோக் கிச் செல்லவிட்டான்.



அப்பொழுது கருவூர் அரண்மனையின் மேல்மாடத்தில் சேரனும் மோசியாரும் நின்று பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் யானை

மீது இருந்த மனிதனைக் கண்டனர்; கருவூர் நோக்கிவந்த யானை உறையூர் நோக்கிச் செல்வதையும் கவனித்தனர்; அவன் யார் என்பது புலவருக்குத் தெரியும்; சேரனுக்குத் தெரியாது. "அவன் யார்? ஓர் அரசன்போல் காணப்படுகிறான். அவன் முன் அறிவிப்பு இல்லாமல் எப்படி இங்கு வரலாம்?" என்று சேரன் சினந்து கேட்டான்.

மோசியார் அன்போடு அவனைப் பார்த்தார்; "சேரர் பெருமானே, யானைமீது வந்தவர் சோழர் பெருமான். அவர் பட்டத்து யானை வெறிகொண்டு விட்டது — கண்டபடி சுற்றி வழி தவறி இங்கு வந்துவிட்டது என்று நினைக்கிறேன். சோழ மன்னர் மிகவும் நல்லவர். நீ தவறாக எண்ணக்கூடாது என்பதற்காகவே யானையை மடக்கித் தம் ஊருக்கு விரைந்து செல்கிறார். இதுதான் உண்மை. நீ அவரைத் தவறாக நினைக்கலாகாது. உன் சீற்றம் தணிவதாக," என்று பக்குவமாகப் பேசினார்.

அது கேட்ட சேரன் சீற்றம் தணிந்தான். திடீரென்று ஏற்பட இருந்த போர் புலவரது பக்குவமான பேச்சினால் நின்றது.

# 9. தலை வழங்க முன் வந்தவன்

கோவை மாவட்டத்தில் உடுமலைப் பேட்டை தாலுகா என்னும் பகுதி இருக்கிறது. அப்பகுதியில் குதிரைமலை என்று ஒரு மலை இருக்கின்றது. அதன் பழைய பெயர் **முதிரமலை** என்பது. அம்மலையையும் அதன் சுற்றுப்புறப் பகுதியையும் **குமணன்** என்பவன் ஆண்டுவந்தான். யார் வந்தாலும் 'வருக' என்று வரவேற்று அவர்களுக்கு உணவும் உடையும் பணமும் வழங்குவது அவன் வழக்கம். இந்த நற்செயலால் அவன் பெயர் தமிழ் நாடு முழுமையும் பரவியது.

குமணனுக்குத் தம்பி ஒருவன் இருந்தான். அவனை **இளங்குமணன்** என்று எல்லோரும் அழைத்தனர். அவன் கல்வியறிவு இல்லாதவன்; ஏழைகளை விரும்பாதவன்; அவர்களுக்கு உதவி செய்யாதவன்; தீயவர் நட்பை விரும்பியவன். அத்தீயவர் நட்பால் அவன் மனம் கல்போல் மாறியது.

அவனுடைய நண்பர் சிலர், "உன் அண்ணன் செல்வத்தை வாரி வழங்குகிறான். சில நாட்களுக்குப் பிறகு அரண்மனையில் உள்ள செல்வம் இல்லையாகும். அப்போது நீ அரசனாக வந்தால் பொருள் இல்லாமல் என்ன செய்வாய்? ஆதலால் இப்போதே நீ அரசைக் கைப்பற்றுவது நல்லது," என்று அவனுக்கு யோசனை கூறினர்.

இளங்குமணன் அந்த யோசனைப்படி அரசைக் கைப்பற்றினன். குமணன் தன் தம்பிக்கு அஞ்சி நாட்டைவிட்டுக் காட்டிற்கு ஓடிவிட்டான்; அங்கு ஒரு மலைக் குகையில் வாழ்ந்து வந்தான். அவனிடம் உண்மை அன்புடைய சிலர், இளங்குமணனுக்குத் தெரியாதபடி குமணனுக்கு உணவை அனுப்பி வந்தனர். தன் அண்ணன் தலையைக் கொண்டு வருபவர்க்குப் பெரும்பொருள் தருவதாக இளங்குமணன் பறை அறைவித்தான்.



**பெருந்தலைச் சாத்தனர்** என்பவர் ஒரு புலவர். அவர் குமணனைப் பார்க்க விரும்பினர்; அவனது நகரத்திற்குச் சென்றூர்;

அவன் நாடுவிட்டுக் காடு சென்று வாழ் வதை அறிந்தார்; இளங்குமணன் பறை அறைவித்த செய்தியையும் கேள்விப்பட்டார் ; குமணனைக் காண விரும்பிக் காட்டிற்குச் சென்றார் ; அவனைக் கண்டு தமது எளிய நிலையை விளக்கிக் கூறினார்.

குமணன் மனம் இளகியது. அவன் அன்போடு புலவரைப் பார்த்தான் ; "புல வரே, நான் அரசனாய் இருந்து, வந்தவர்க் கெல்லாம் பொருள் வழங்கியபோது நீர் வர வில்லை. நான் அரசை இழந்து துன்பப்படும் இக்காலத்தில் என்னை நாடி வந்திருக்கிறீர். நான் சொல்வதுபோலச் செய்யும். உமக்குப் பெரும்பொருள் கிடைக்கும். இந்த வாளால் எனது தலையை அறுத்துக் கொண்டுபோய் என் தம்பியிடம் காட்டும். அவன் பெரும் பொருள் தருவான். உமது வறுமை ஒழியும்," என்று கூறித் தன் வாளைப் புலவர் கையில் தந்தான்.

புலவர் மனம் உருகியது. அவர் வாளை எடுத்துக்கொண்டு இளங்குமணனிடம் ஓடி னார்; குமணன் கூறியதை உருக்கமாக உரைத்தார். அதுகேட்ட இளங்குமணன் மனம் மாறியது. அவன் புலவருடன் காட் டிற்கு ஓடினான்; தன்னை மன்னிக்கும்படி வேண்டினான்; தன் அண்ணனை மீண்டும் அரசனாக்கினான். புலவர் மகிழ்ச்சியோடு உதவி பெற்றார்.


# 10. வெளிமான்

சங்ககாலத் தமிழ்நாட்டில் சிற்றரசர் பலர் வாழ்ந்தனர். *பாரி* வள்ளல் ஒரு சிற்றரசன். அவன் முல்லைக்குத் தேர் கொடுத்துப் புகழ் பெற்றவன். மற்றொருவன் **பேகன்** என்பவன். அவன் மயிலுக்குப் போர்வை கொடுத்துப் புகழ்பெற்றவன். **குமணன்** வந்தவர்க்கெல்லாம் வாரி வழங்கிய உத்தமன். *அதியமான்* கொடையிற் சிறந்த வள்ளல். **மலையமானும்** புலவரை ஆதரித்துப் புகழ் பெற்றவன். கொல்லிமலைப் பகுதியை ஆண்ட *ஓரி* என்பவனும் எல்லையில்லாது வழங்கினான்.

இத்தகைய சிற்றரசருள் *வெளிமான்* என்பவன் ஒருவன். அவன் புலவர் — பாணர்-கூத்தர் என்பவர்களை 'வருக, வருக' என்று வரவேற்பான்; அவர்கள் கட்டியிருக்கும் கந்தை ஆடைகளை அகற்றுவான்; புதிய ஆடைகளை வழங்குவான்; பலவகைச் சிற்றுண்டிகளும் பேருண்டிகளும் படைத்து 'உண்ணுங்கள், உண்ணுங்கள்' என்று உபசரிப்பான்; அவர்களைப் பல நாள் தன்னுடன் இருக்கச் செய்வான்.

இவ்வாறு வெளிமான் தாராள மனத்துடன் பல ஆண்டுகள் நடந்துவந்தான். அவனது அரண்மனையில் புலவர் இல்லாத நாளே யில்லை. அவன் மனைவியரும் புலவர்களை உபசரிப்பதில் பெயர் பெற்றவர்கள். வெளிமான் இல்லாதபோதும், அவர்கள், வந்தவர் மனம் கோணதபடி உபசரித்தனர்; வேண்

டிய பொருள்களைக் கொடுத்தனர். இவற்றால் புலவர் பெருமக்கள் வெளிமானது கொடைத் தன்மையைப் பலவாறுபுகழ்ந்து பாராட்டினர்; செய்யுட்களும் செய்தனர்.



***பெருஞ்சித்திரனார்*** என்பவர் சங்ககாலப் புலவர். அவரிடம் கல்வி பெருகி இருந்தது; ஆனால் செல்வம் பெருகவில்லை. அவர் வறுமையில் வாழ்ந்தார். அவரது மனைவி வறுமையால் மெலிந்தாள். அவர் மக்கள் உணவின்றி வாடினர். அப்புலவர் வெளிமானது கொடைத்தன்மையைக் கேள்வியுற்றார்; அவ் வள்ளலைக் கண்டு தம் வறுமையைப் போக்க

எண்ணினர்; அவன் இருந்த ஊர் நோக்கி நடந்தார்; பலநாள் வருந்திநடந்துஇறுதியில் அவனது அரண்மனையை அடைந்தார்.

புலவர் சென்றபோது வெளிமான் நோயுற்றுப் படுத்திருந்தான். பலர் அவனைச் சூழ்ந்திருந்தனர். அந்த நிலையில் அவன் புலவரைக் கண்டான்; அவரது வரலாற்றை அன்போடு கேட்டு அறிந்தான். அவனது மனம் இளகியது; "புலவர் பெருமானே, யான் நலமாய் இருந்து உதவி செய்தபொழுது தாங்கள் வரவில்லை. யான் நோயுற்று உயிர்விடும் தறுவாயில் இருக்கிறேன். உங்கள் வறிய நிலை இரங்கத்தக்கது. உங்களுக்கு உதவி செய்யும்படி என் தம்பியிடம் கூறுவேன்," என்று பேசமுடியாது பேசினன். சிறிது நேரத்தில் அவனது உயிர் பிரிந்தது.

புலவர் தாம் கேள்வியுற்ற அவனுடைய நல்ல இயல்புகளைச் சொல்லிச்சொல்லி அழுதார். பக்கத்தில் இருந்தவர்கள் எல்லோரும் அழுதனர். வெளிமானது உடல் அடக்கம் செய்யப்பட்டது. புலவர் சிலநாள் அங்குத் தங்கினர்.

இளவெளிமான் ஒரு மூடன்; புலவரைப் போற்றத் தெரியாதவன். அவன் தன் அண்ணன் கூறியதற்காகச் சிறிதளவு பொருளைப் புலவர்க்குக் கொடுத்தான். புலவர் அதனை வாங்க மறுத்து அவ்விடத்தை விட்டுச் சினத்துடன் அகன்றூர்.

# 11. பெருஞ்சித்திரனர்

தமிழ்ப் புலவர்கள் வள்ளல்களிடம் சென்று உதவியை வேண்டுவார்கள்; ஆயினும், அவ் வள்ளல்கள் தங்கள் தகுதியை அறிந்து கொடுக்கப்படும் செல்வத்தையே பெறுவார்கள்; தம் தகுதிக்குக் குறைந்த பொருளேப் பெறமாட்டார்கள்; குறைவாகக் கொடுத்த சிற்றரசர்களேக் கடிந்து பேசுவார்கள்; "நீ நோயின்றி வாழ்வாயாக!" என்று கூறிச் செல்வார்கள். அதன் பொருள் யாது? "புலவரை அவமதித்ததனல் உனக்குத் தீங்கு விளேயலாம். நீ அத் தீங்கு வராமல் வாழ்வாயாக!" என்பது கருத்து.

தமிழ்ப் புலவர்கள் படித்த பெரியவர்கள்; ஒழுக்கத்தில் சிறந்தவர்கள். அவர்களே மதித்து நடப்பதே மன்னவர் கடமை; அவர்களுக்கு வேண்டிய உதவிகளேச் செய்வது அவர்தம் பொறுப்பு. சங்ககால மன்னர்கள் இதனே நன்கு அறிந்திருந்தார்கள்; தம்மை நாடிவந்த புலவர்களுக்குத் தம்மால் இயன்ற உதவியைச் செய்தார்கள்; புலவர்களது பாராட்டைப் பெற்ருர்கள். ஆயினும், அதே சங்க காலத்தில் **இளவெளிமான்** போன்ற அற்பர் சிலரும் இருந்தனர்.

தமது தகுதிக்கு ஏற்றபடி உதவி செய்யாத இளவெளிமானே விட்டு அகன்ற

**பெருஞ்சித்திரனார்**, குமணன் என்ற சிற்றரசனிடம் சென்றார். குமணன் இரக்கமே உருவாக வந்தவன்; புலவரது வறுமைக்கு எமனாக இருந்தான். அவனது அரண்மனை புலவருக்குத் தாய்வீடு போல இருந்தது. அவன் பெருஞ்சித்திரனாரை அன்போடு வரவேற்றான்; அவருக்கு அறுசுவை உண்டியை வழங்கினான்; புதிய உடைகளை வழங்கினான்.

புலவர் தமது எளிய வாழ்க்கையைக் குமணனிடம் பின்வருமாறு கூறினார்: "என் தாய் மிக்க வயது முதிர்ந்தவள்; கோல்ஊன்றி நடப்பவள். பசியால் துன்புறும் அவள், 'என் உயிர் இன்னும் போகவில்லையே!' என்று வருந்திக்கொண்டு இருக்கிறாள். என் மனைவி பல பிள்ளைகளைப் பெற்றவள். இயல்பாகவே மெலிந்த அவளது உடல், பட்டினியால் மிகவும் மெலிந்து விட்டது. பெரிய பிள்ளைகளுக்கு உணவில்லை. குழந்தைக்குத் தாயிடம் பால் இல்லை. பசியால் பிள்ளைகள் தாய் முகம் நோக்கி அழுதார்கள்; அவள் என் முகம் நோக்கி அழுதாள்; நான் நின் முகம் நோக்கி வந்திருக்கின்றேன்"

அவரது வரலாறு குமணன் உள்ளத்தை உருக்கியது. அவன் புலவர் மனம் மகிழும்படி பெருஞ் செல்வத்தை அளித்தான்; ஒரு பெரிய யானையையும் வழங்கினான். புலவர் மகிழ்ச்சி

யோடு யானைமீது அமர்ந்தார்; இளவெளி மான் ஊருக்குச் சென்றார்.



புலவர் இளவெளிமானைப் பார்த்தார்; "தமிழ்நாடு இடம் அகன்றது. ஆதலால் என் போன்ற ஏழைகளுக்கு உதவுவோர் பலர் இருக்கின்றனர். என் போன்ற புலவரின் தகுதி அறிந்து கொடுப்பவரும் இருக்கின் றனர் என்பதை என்னைப் பார்த்தே நீ தெரிந்துகொள்ளலாம். யான் வருகிறேன்." என்று கூறி யானைமீது ஏறினார். இளவெளி மான் தனது செயலுக்கு நாணினான்.

# 12. இளவிச்சிக்கோ

**நன்னன்** பரம்பரையில் **விச்சிக்கோ** என்ற ஒருவன் தோன்றினான். அவன் தம்பி இளவிச்சிக்கோ என்பவன். இந்த இருவரும் நல்ல குணமுடையவர்; குடிகளிடம் மிக்க அன்பாக நடந்துகொண்டனர்; குடிமக்களுக்கு வேண்டிய நன்மைகளை யெல்லாம் விருப்பத்தோடு செய்தனர்.

அறிவிலும் குணத்திலும் சிறந்திருந்த அந்த இருவர் உள்ளங்களிலும் தீராத மனக் கவலை இருந்து வந்தது. நன்னன் பெண் கொலை புரிந்ததால் புலவர்கள் நன்னன் வழி வந்தவரை மதிக்கவில்லை; செய்யுள் பாடி வாழ்த்தவும் இல்லை. இந்தக் கவலையே அந்த இருவரையும் வருத்தியது. ஆயினும் மற்ற அரசர்கள் அவ்விருவரையும் மதித்து வந்தனர்; அவர்களோடு நெருங்கிப் பழகியும் வந்தனர்.

தோட்டி மலையை ஆண்டவன் கண்டீரக் கோப்பெரு **நள்ளி** என்பவன். அவன் சிறந்த கொடையாளி; புலவர்கள் அவன்மீது பல பாக்களைப் பாடினர். அவன் தம்பி **இளங் கண்டீரக்கோ** என்பவன். அவனும் மிகச் சிறந்த கொடையாளி; நல்லொழுக்கம் மிகுந்தவன்; புலவர்கள் அவனுடன் மனம் கலந்து பழகினார்கள்.

இளங்கண்டீரக்கோவும் இளவிச்சிக்கோவும் நெருங்கிய நண்பர்கள். ஒருநாள் இளவிச்சிக்கோ இளங்கண்டீரக்கோவின் அரண்மனைக்குச் சென்றான்; விருந்துண்டான்; தன் நண்பனுடன் இன்பமாகப் பேசிக்கொண்



டிருந்தான். அவ்வமயம் **பெருந்தலைச் சாத்தனார்** என்ற புலவர் அங்குச் சென்றார்; இளவரசர் இருவரையும் கண்டார்; இளங்கண்டீரக்கோவை மாத்திரம் அன்போடு தழுவிக் கொண்டு பேசினார். அவர் இளவிச்சிக்கோவைத் தழுவவில்லை; அவனிடம் பேசவும் இல்லை. அதனால் இளவிச்சிக்கோ நாணம் அடைந்தான். அவனது முகம் வாட்டமடைந்தது. அவன் புலவரைப் பார்த்து, "என்னுடன் பேசாமைக்குக் காரணம் யாது?

யான் ஒரு குற்றமும் செய்யவில்லையே!'' என்று மிக்க வருத்தத்துடன் கேட்டான்.

பெருந்தலைச் சாத்தனார் இளவிச்சிக் கோவைப் பார்த்தார்; "ஐயனே, இளங்கண்டீரக்கோவின் முன்னோர்கள் புலவர்களை மதித்து நடந்தவர்கள். கண்டீரக்கோவும், இளங்கண்டீரக்கோவும் இன்றும் புலவர்களை மதிப்பவர்கள். இவர்கள் வீட்டுப் பெண்களும், ஆண்கள் வீட்டில் இல்லாதபோதும் புலவர்களை அன்போடு உபசரிப்பவர்கள்; வேண்டும் உதவிகளைச் செய்பவர்கள். ஆதலால் நான் இப்பெருமகனைத் தழுவினேன்.

''நீ குற்றமற்றவன் ஆயினும், உன் முன்னோருள் ஒருவனான நன்னன் என்பவன் ஒரு கொடுஞ் செயலைச் செய்தவன்; தனது தோட்டத்திலிருந்து நீரில் விழுந்த பசுங் காயைத் தின்றதற்காக ஒரு சிறுமியைக் கொலைசெய்தவன்; அவள் தகப்பன் எவ்வளவு வேண்டியும் மனம்இளகாதவன். தமிழுலகமே அக்கொடியவனைக் கண்டித்தது. அவன் வழி வந்த மற்றொருவன் ஒரு புலவரைக்கண்டதும் அரண்மனைக் கதவை மூடிவிட்டான். இத்தகையவரைத் தமிழகம் கண்டதில்லை. நீ இக் கொடியவர் மரபில் வந்தவன். ஆதலால் நான் உன்னைத் தழுவவில்லை,'' என்று ஆத்திரத்துடன் கூறினார்.

விச்சிக்கோ நாணத்தால் தலைகுனிந்தான்.

## 13. புலவர்க்குப் புலவர் உதவி

தஞ்சாவூர் மாவட்டமும் திருச்சிராப்பள்ளி மாவட்டமும் சேர்ந்த நிலப்பகுதியே பழைய சோழநாடு என்பது. அதனை இரண்டாகப் பிரித்து **நலங்கிள்ளி** என்பவனும் **நெடுங்கிள்ளி** என்பவனும் ஆண்டு வந்தனர். சிறிது காலம் கழித்து அவருள் பகைமை உண்டாயிற்று. இருவரும் போரிடத் தொடங்கினர்.

**இளந்தத்தர்** என்பவர் ஒரு புலவர். அவர் மிகவும் ஏழை; நலங்கிள்ளியையும் நெடுங்கிள்ளியையும் நேரில் சந்தித்துப் பாடி உதவி பெறலாம் என்று எண்ணினார். அதனால் அப்புலவர் முதலில் நலங்கிள்ளியைச் சந்தித்தார்; அவன்மீது ஒரு பாடல் பாடினார். நலங்கிள்ளி அப்பாடலைப் பாராட்டினான்; புலவருக்குப் பொருள் உதவி செய்தான். புலவர் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்; அடுத்து, நெடுங்கிள்ளியைக் காணச் சென்றார்; அவனைக் கண்டு, அவன் மீது ஒரு பாட்டைப் பாடினார்.

அப்பொழுது அங்கே இருந்த ஓர் அலுவலாளன் மன்னனை வணங்கி, "இவர் நலங்கிள்ளியைப் பார்த்துவிட்டு வருகிறார். ஆதலால் இவர் நலங்கிள்ளியிடமிருந்து வரும் ஒற்றராக இருக்கலாம்," என்று கூறினான். அதுகேட்ட நெடுங்கிள்ளியின் கண்கள் சிவந்

தன; மீசை துடித்தது. அவன், "இவனைச் சிறையில் அடையுங்கள்; இவனைக் கொல்வதே முறை," என்று உறுமினன். பாவம்! பாடிப் பரிசு பெறச் சென்ற இளந்தத்தர் சிறையில் அடைக்கப்பட்டார்; 'நாம் எப்பொழுது கொல்லப்படுவோமோ!" என்று நடுங்கினர்.

***கோவூர்கிழார்*** என்பவர் ஒரு பெரும் புலவர். அவர் சோழ அரசர்களை நன்கு அறிந்தவர்; அரசராக இருந்தாலும், அஞ்சாமல் கண்டிப்பவர். இவற்றை நீங்கள் முன்பே அறிந்திருக்கிறீர்கள். அப்பெரியார் இளந்தத்தர் சிறைப்பட்டதை அறிந்தார்; அவரைக் காப்பாற்ற விரும்பினர். அதனல் நெடுங்கிள்ளியிடம் சென்ருர்; அவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினர்.

"அருள் உள்ளம் கொண்ட சோழ மன்னர் குடியில் பிறந்த அரசே, நீ வாழ்வாயாக! புலவர்கள் வறுமையில் வாழுபவர்கள். அவர்கள் உன்னைப் போன்ற மன்னர்களிடம் பாடி உதவி பெற்று வாழ்கிறவர்கள்; அந்த உதவியைக் கொண்டு தம்மையும் தம் சுற்றத்தாரையும் காப்பவர்கள்; ஏழைகள் ஆயினும் நெறி தவருதவர்கள். அத்தகைய புலவருள் ஒருவரே இளந்தத்தர்; உன்னைப் பாடிப் பொருளுதவி பெற வந்தவர்; யான் சொல்ல விரும்பியதைச் சொல்லிவிட்டேன். நீ விரும்பியதைச் செய்."

கோவூர்கிழாருடைய பேச்சு நெடுங்கிள்ளியின் உள்ளத்தைக் கவர்ந்தது. உடனே அவன் இளந்தத்தரை விடுவித்தான்; அவர் வேண்டிய பொருளைக் கொடுத்து வழி அனுப்பினான். அது கண்ட கோவூர்கிழார் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001

# 14. கொலை தவிர்த்த புலவர்

ஏறக்குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்குமுன் மதுரையில் பாண்டிய அரசர்கள் தமிழ்ச் சங்கத்தை வைத்திருந்தனர். புலவர் பலர் அச்சங்கத்தில் இருந்து பல நூல்களைச் செய்தனர்; தமிழை ஆராய்ந்தனர். சங்கத்தோடு தொடர்பு கொண்டிருந்த காரணத்தால் அவர்கள் **சங்ககாலப் புலவர்கள்** என்று பெயர் பெற்றார்கள்.

முன் கதைகளில் சொல்லப்பெற்ற புலவர்கள் எல்லோருமே சங்ககாலப் புலவர்கள். அவருள் **கோவூர் கிழார்** என்பவரும் ஒருவராவர். அவர் பெரும்புலவர்; ஒழுக்கம் தவறாதவர்; எவருக்கும் அஞ்சாதவர்; உள்ளதை உள்ளபடியே சொல்பவர்; அரசர்கள் தவறு செய்தாலும் அதனைச் சுட்டிக் காட்டித் திருத்துபவர்; பிறருக்கு நல்லது செய்வதையே தம் கடமையாகக் கொண்டவர்.

அவர் காலத்தில் **கிள்ளிவளவன்** என்ற சோழ அரசன் சோழநாட்டை ஆண்டு வந்தான். அவன் சிறந்த கல்விமான்; புலவர்களை நன்கு ஆதரித்தான்; அவர்களோடு உரையாடி மகிழ்ந்தான்; அவர்கள் விரும்பியவாறு பரிசுகள் வழங்கினான். அவனது அரண்மனை முத்தமிழ் வாணர்க்கும் தாய் வீடு போல் இருந்தது; அவனைப் பாராட்டிப் புலவர் பலர் பாக்கள் பாடினர்;

திருக்கோவலூரில் **மலையமான் திருமுடிக்காரி** என்ற சிற்றரசன் ஆண்டு வந்

தான். அவன் சிறந்த போர்வீரன்; தமிழிலும் மிக்கபற்றுடையவன். அவன் தன்னிடம் வந்த புலவர்களை மிக்க மரியாதையுடன் நடத்தினன்; அவர்களுக்கு வேண்டியவற்றை வழங்கினன். அவனது புகழும் பைந்தமிழ்நாடு முழுதும் பரந்து இருந்தது.

கிள்ளி வளவனுக்கும் மலையமானுக்கும் எக்காரணத்தாலோ பகைமை ஏற்பட்டது. சோழன் தன் ஆட்களை ஏவி மலையமான் மக்கள் இருவரையும் கொண்டுவரச் செய்தான்; மலையமான்மீது இருந்த பகைமையை அவனுடைய பிள்ளைகளைக் கொன்று தீர்த்துக் கொள்ள விரும்பினன்; அவர்களை யானையின் காலால் இடறிக் கொல்லும்படி ஏற்பாடு செய்தான்.

இக்கேடான செயலைக் கோவூர் கிழார் கேள்விப்பட்டார். அவர் மனம் திடுக்கிட்டது. அவர் ஓடோடியும் வந்தார்; கிள்ளிவளவனது அவையை அடைந்தார். அப்போது அரசவையில் கிள்ளிவளவனும் வீற்றிருந்தான். அவனுக்கு எதிரில் அரசாங்க அலுவலர் பலர் அமர்ந்திருந்தனர். அரசவைக்கு எதிரில் திறந்த வெளி இருந்தது. அவ்வெளியில் மலையமான் மக்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். அவர்களுக்கு எதிரில் சிறிது தொலைவில் யானை துதிக்கையை ஆட்டிக்கொண்டு நின்றது. சிறுபிள்ளைகள் இருவரும் புதிய அரசனையும் மற்றவரையும் பார்த்து அழுதனர். பின்பு

அழுகையை நிறுத்தி எதிரிலிருந்த யானையை வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தனர்.



கோவூர்கிழார் வருத்தத்தோடு அக்காட்சியைக் கண்டனர். கிள்ளி வளவன் மிக்க மரியாதையோடு அவரை வரவேற்ருன். புலவர், ''பெருமானே, நீ ஒரு புருவுக்காகத் தன் உடம்பை வழங்கிய சோழன் பரம்பரையில் வந்தவன். இப்பிள்ளைகள் சிறந்த கொடையாளியின் மக்கள். இச் சிறுவர்கள் உனக்கு ஒரு குற்றமும் செய்யாதவர்கள். இவர்களைக் கொல்வதால் நீ அடையும் பயன் யாது? என் சொற்களைக் கேட்டனையாதலால், உன் விருப்பப்படி நட,'' என்று உருக்கமாக உரைத்தனர்.

கிள்ளிவளவன் உள்ளத்தில் புலவரது பேச்சு ஆழமாகப் பதிந்தது. அவன் அப்பிள்ளைகளைக் கொல்லாது விடுத்தான். புலவர் அவனை உளமார வாழ்த்திச் சென்ருர்.

# 15. போர்க்களத்தில் புலவர்


பழந்தமிழ் நாட்டில் ஆண்களைப் போலவே பெண்களும் கல்வி கற்றனர். அவருள் சிலர் கவிபாடும் ஆற்றலும் பெற்றனர்; முடிமன்னரிடமும் சிற்றரசர்களிடமும் சென்று கவிபாடினர்; அவர்களால் மதிப்பும் பெற்றனர்; அவருள் **ஔவையார்,** நப்பசலையார் என்ற பெண்பாற் புலவர் குறிப்பிடத் தக்கவர்.

ஔவையார் பெண் புலவர் ஆயினும் அஞ்சாமை மிகுந்தவர்; திறம்படப் பேசுவதில் வல்லவர். அவர் தகடூரை ஆண்ட அதியமானிடம் முதலில் சென்றார். அவன் பரிசில் வழங்கத் தாமதித்தான். அதுகண்ட ஔவையார் சீற்றங்கொண்டார்; அரண்மனை வாயிற் காவலனைப் பார்த்து, "உங்கள் அரசன் என்னை இழிவாக நினைக்கின்றான் போல் இருக்கிறது. இவனைக் கண்டா தமிழைப்படித்தேன்?" என்று சினந்து பேசினார்.

ஔவையாரது சீற்றத்தைக் கண்ட அதியமான் அஞ்சினான்; தன் தவற்றை மன்னிக்கும்படி வேண்டினான்; அவர் மனம் மகிழும்படி பரிசு வழங்கினான். ஔவையார் அவனை மன்னித்தார். அவனது கொடைத் தன்மையைப் பாராட்டினார்; அவன் வேண்டிக்கொண்டபடி அவனது அவைப் புலவராக இருந்தார்.

அதியமான் சிறந்த போர்வீரன். அவன் பலரைப் போரில் வென்றவன். ஒரு முறை

திருக்கோவலூரை ஆண்ட மலையமான் அதிய மானை எதிர்த்தான். இருவரும் போரிட்டனர். இருவர் படைகளும் போர் புரிந்தன. அதிய மான் வாளேந்திக் கடும்போர் புரிந்தான். அதனால் மலையமான் படை நிலை தளர்ந்தது.



ஔவையார் அதியமானோடு போர்க்களம் சென்றிருந்தார். அவர் அதியமானை அடிக்கடி ஊக்குவித்தார். போர் கடுமையாக நடை பெற்றது. யானைகள் யானைகளோடு போரிட் டன. குதிரைகள் குதிரைகளோடு போர் புரிந் தன. ஈட்டி வீரர் ஈட்டி வீரரைத் தாக்கினர். வாள் வீரர் வாள் வீரரோடு போர் புரிந்தனர். போர்க்களத்தில் இரத்த ஆறு ஓடியது. இறுதி

யில் அதியமான் வெற்றி பெற்ருன். அவனது வெற்றியைப் பாராட்டிப் ***பரணர்*** என்னும் **புலவர்** பெருமான் ஒரு செய்யுள் பாடிஞர்.

ஔவையார் அதியமான் வெற்றி பெற்றதைக் கண்டு மகிழ்ந்தார்; "அரசே, உன் முன்ஞேர் கரும்பை இந்த நாட்டிற்குக் கொண்டுவந்தனர்; பல நாடுகளை வென்று ஆண்டனர். நீயும் அவர்களைப் போலவே பலரை வென்று புகழ் பெற்றவன். நீ ஒவ்வொரு முறை வெற்றி பெற்ற பொழுதும் புலவர்கள் உன்னைப் பாராட்டிப் பாடியிருக்கின்றனர். இப்பொழுது பரணர் உன்னை மகிழ்ச்சியோடு பாராட்டிப் பாடியுள்ளார்," என்று அதியமான் முன்ஞேரையும் அதியமானையும் பாராட்டிப் பேசிஞர்.

# 16. வீராயியின் வீரம்

*வீராயி* பாண்டிய நாட்டுப் பெண். அவள் பாண்டிய நாட்டு வீரர் குடியில் பிறந்தவள். அவள் தகப்பன் ஒரு பெரிய வீரன். அவனுக்கு வீராயி என்ற மகளும் வீரப்பன் என்ற மகனும் இருந்தனர். அவன் அவ்விருவரையும் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தான்; இருவரையும் படிப்பித்தான். வீரப்பன் பாண்டியர் படையில் வீரனாகச் சேர்ந்தான்; வீராயி படிப்பு முடிந்த பிறகு வீரண்ணன் என்பவனை மணந்துகொண்டாள். அவனும் ஒரு வீரன்.

ஒரு முறை சேரன் பாண்டிய நாட்டைத் தாக்கினான். அப்பொழுது ஒரு போர் நடைபெற்றது. அப்போரில் வீராயியின் தந்தை போரிட்டான்; பலரைக் கொன்று தன் வீரத்தை விளக்கமாகக் காட்டினான். அரசனும் அவனைப் பாராட்டினான். ஆனால் போரின் முடிவில் பகைவன் வாளுக்கு இரையாகி வீரன் மடிந்தான்.

மற்றொரு சமயம் சோழன் பாண்டியனைத் தாக்கினான். அப்பொழுது கடும்போர் நடந்தது. பாண்டிய வீரர்கள் பகைவரைக் கடுமையாகத் தாக்கினார்கள். அவருள் வீராயியின் அண்ணனான **வீரப்பனும்** ஒருவன். அவன் சிறந்த வில்வீரன்; விஷம் தோய்த்த அம்புகளை ஏவிப் பலரைக் கொன்றான். மன்னன் அவன் வீரத்தைப் பாராட்டினான். ஆனால், பாவம்!


வீரப்பன் நெடுநேரம் போரிட்டுக் களைத்தான். அப்பொழுது பகைவர் விட்ட அம்புகள் அவன் உடம்பைத் துளைத்தன. அவன் மண்ணில் விழுந்து மாண்டான்.

வேறொரு சமயம் சிற்றரசர் சிலர் பாண்டியனை எதிர்த்தனர். அப்பொழுதும் கொடிய போர் நடைபெற்றது; பாண்டிய வீரர் பகைவரைக் கடுமையாகத் தாக்கினர். அவருள் **வீரண்ணனும்** ஒருவன். அவன் கடுமையாகப் போரிட்டு உயிர் துறந்தான். வீராயி தன் கணவனது வீரத்தைப் பாராட்டி மகிழ்ந்தாள்.

சில ஆண்டுகள் கழிந்தன. சேரன் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தான். பாண்டிய வீரர் கொதித்தெழுந்தனர். ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒரு மகன் போருக்குப் புறப்பட்டான். எல்லோரும் "சேரனை முறியடிப்போம்" என்று முழங்கினர். படைவீரர் தெருத் தெருவாக ஊர்வலம் வந்தனர்; வீரமுழக்கம் செய்தனர்.

வீராயியின் வீட்டில் போர் செய்யத்தக்க இளைஞர் இல்லை. வீட்டில் அவளும் அவளது சிறிய மகனுமே இருந்தனர். இந்த உலகத்தில் அச்சிறுவனே அவளுக்கு எல்லாமாக இருந்தான். அப்படி இருந்தும், அவள் அச்சிறுமகனைப் போருக்கு அனுப்பத் துணிந்தாள்; அவனை அழைத்தாள்; அவன் தலையில் எண்ணெய் தடவிச் சீவினாள்; அவன் கையில்


வேலைக் கொடுத்தாள்; "மகனே, நீ எனக்கு ஒரே பிள்ளை. நமது நாட்டைப் பகைவன் தாக்குகிறான். இந்த நேரத்தில் நீ இங்கு இருப்பதை விடப் போர்க்களம் செல்வதே சிறந்தது. இந்த வேலைக்கொண்டு உன்னால் முடிந்த அளவு போர் செய்," என்று சொல்லி, அவனை வாழ்த்தி வழியனுப்பினாள்.



அச்சிறுவன் வீரர் பரம்பரையில் வந்தவன் அல்லவா? அவன் துள்ளிக் குதித்து ஓடினான்; தன்னால் முடிந்தவரையிலும் போரிட்டான்; முடிவில் மார்பில் காயம்பட்டு மடிந்தான். அவனது வீரத்தைக் கேட்ட வீராயி மகிழ்ச்சிக் கண்ணீர் விட்டாள். இத்தகைய வீரத் தாய்மார்கள் வாழ்ந்த நாடுதான் இன்று நாம் வாழும் **தமிழ் நாடு.**

# 17. அரசு துறந்த இளங்கோ

நெடுஞ்சேரலாதன் என்பவன் சேர நாட்டு அரசன். அவனுக்குச் செங்குட்டுவன், இளங்கோ என்ற பிள்ளைகள் இருவர் இருந்தனர். அப் பிள்ளைகள் இருவரும் நன்கு கல்வி கற்றனர்; போர்ப் பயிற்சியும் பெற்றனர்; நாள்தோறும் அரச அவையில் தம் தந்தையுடன் இருந்து அரசாங்க வேலைகளில் பயிற்சி பெற்றனர்.



ஒரு நாள் அரச அவையில் அரசனுக்கு இரண்டு பக்கங்களிலும் இளங்கோவும் செங் குட்டுவனும் இருந்தனர். அந்த அவையில் அமைச்சர், சேனைத் தலைவர், நகரப் பெருமக்

கள் முதலியோர் இருந்தனர். அப்பொழுது அயல்நாட்டுச் சோதிடன் ஒருவன் அங்கு வந்தான்; அரசனைப் பணிந்தான்.

அச்சோதிடன் செங்குட்டுவனையும் இளங்கோவையும் மாறிமாறிப் பார்த்தான். இளங்கோவைப் பார்த்தபோது அவன் முகத்தில் வியப்புத் தோன்றியது. அவன் இளங்கோவை முடிமுதல் அடிவரையில் கூர்ந்து கவனித்தான்; இறுதியில் எழுந்து மன்னனை வணங்கினன்; "அரசே யான் கூறுவதைக் கேட்டுப் பொறுக்க வேண்டும்; உங்கள் இரண்டாம் மகனிடமே அரசர் ஆவதற்குரிய இலக்கணங்கள் பொருந்தி யிருக்கின்றன. ஆதலின் உங்களுக்குப் பிறகு அவரே அரசர் ஆவார்," என்றான்.

சோதிடன் கூறியதைக் கேட்ட அரசன் திடுக்கிட்டான். செங்குட்டுவன் கவலை கொண்டான். அவையோர் திடுக்கிட்டனர்; அரசகுமாரர் இருவர் முகங்களையும் மாறிமாறிப் பார்த்தனர். இளங்கோவின் முகம் சிவந்தது. அவன் சோதிடனைச் சினந்து நோக்கினன்; "ஐயா, மூத்தவர் இருக்க இளையவன் பட்டம் அடைதல் எங்கும் வழக்கம் இல்லை. நீர் கூறுவது நடவாத ஒன்று," என்றான்.

சோதிடன், "இளவரசே, என் மனதிற்பட்டதைச் சொன்னேன். நான் சொல்வது தவறாது," என்று அழுத்தமாகக் கூறினன்.

இளங்கோ எழுந்து, "சோதிடரே, நீர் சொல்லுவது நடவாதபடி நான் பார்த்துக் கொள்வேன். நான் குடும்பத்திலிருப்பதால் அரச பதவிமேல் ஆசை பிறந்தாலும் பிறக்க லாம்; ஆதலால் நான் இப்பொழுதே துறவு கொள்கிறேன். இதனால் அரசு என் அண்ணனுக்கே உரியதாகட்டும்," என்றான். செங்குட்டுவன் தன் தம்பியை அணைத்துக் துக் கண்ணீர் விட்டான். இளங்கோவின் முடிவைக் கேட்டுத் தந்தையும் வருந்தினான். அவையோர் அவனுடைய தியாகத்தைப் பாராட்டினர்.

இளங்கோ அன்றுமுதல் துறவி ஆனார்; அதனால் **இளங்கோ அடிகள்** எனப் பெயர் பெற்றார். அவர் தாம் கோவலன் - கண்ணகி வரலாற்றை ஒரு பெரிய நூலாக எழுதினார். அந்த நூலின் பெயர்தான் **சிலப்பதிகாரம்**. நீங்கள் மேல் வகுப்புக்களில் சிலப்பதிகாரத் தைப் படித்து மகிழுங்கள்.

# 18. சேரன் செங்குட்டுவன்


**செங்குட்டுவன்** சேர நாட்டுப்பேரரசருள் ஒருவன். இவன் காலத்தில்தான் கண்ணகி சேர நாட்டை அடைந்து தேவர் உலகம் புகுந்தாள். இவனது தம்பி **இளங்கோ அடிகள்** என்பவர்.

ஒருநாள் சேரன் மலைவளம் காணச் சென்றான். அவனுடன் அரசியும் இளங்கோ அடிகளும் அமைச்சரும் சேனைத் தலைவர்களும் சென்றனர். மலைநாட்டு மக்கள் அவர்களை வரவேற்றனர். அவர்கள் மான் கொம்பு யானைத் தந்தம், கிழங்கு வகைகள், தேன், தினைமா, மயில் தோகை முதலிய பலபொருள் களை அரசனுக்குக் காணிக்கையாக வைத்தனர்; "சில நாட்களுக்கு முன் ஒரு பெண்மணி இங்கு வந்தாள். இந்த வேங்கை மரத்தடியில் நின்றாள்; பிறகு ஒரு விமானத்தில் ஏறித் தேவர் உலகம் சென்றாள். நாங்கள் எங்கள் கண்களால் இக்காட்சியைக் கண்டோம்," என்று கூறி அகன்றனர்.

சேரனுக்கு ஒன்றும் புரியவில்லை. அப்பொழுது அங்குச் **சாத்தனார்** என்ற புலவர் வந்தார். அவர் மதுரையைச் சேர்ந்தவர். அவர் கண்ணகியை நேரில் பார்த்தவர்; அவளது வரலாற்றை மதுரையிலேயே கேட்டறிந்

தவர்; ஆதலால் அவர் கண்ணகி வரலாற்றை விளக்கமாய்க் கூறினர்.

அவ்வரலாறு கேட்டுச் செங்குட்டுவன் மிக்க வருத்தம் அடைந்தான்; தன் மனைவியிடம், "பாண்டியனுடன் உயிர் விட்ட அரசமாதேவி உயர்ந்தவளா? நம்நாடு வந்து விண்புகுந்த கண்ணகி உயர்ந்தவளா?" என்று கேட்டான். அவள், "இருவரும் உயர்ந்தவரே; ஆயினும் நம்நாடு நோக்கி வந்து தேவர் உலகம் சென்ற பத்தினிக் கடவுளை நாம் கோவில் கட்டி வழிபட வேண்டும்," என்றாள். மன்னனும் இசைந்தான்.



கண்ணகியின் உருவத்தைப் பொறிக்கத் தக்க கல்லை இமய மலையிலிருந்து கொண்டு

வருவது என்பது முடிவு செய்யப்பட்டது: இச் செய்தி நகரத்தில் பறையறைந்து தெரிவிக்கப் பட்டது. செங்குட்டுவனே புறப்படத் தயாரானன். அவனுடன் யானைப்படை, குதிரைப் படை, காலாட்படை என்ற மூன்றும் புறப்பட்டன. பெரியோர்களும் அரசாங்க அலுவலரும் வஞ்சி மா நகர எல்லை வரையில்செங்குட்டுவனோடு சென்று வழிவிட்டனர். நகரப் பொது மக்கள் அவனுக்கு வாழ்த்துக் கூறினர்.

“வடநாட்டு அரசர் சிலர் என்போன்ற தமிழரசர் வீரத்தைப் பழித்துக் கூறினராம். அவருள் **கனகன், விசயன்** என்பவர் குறிப்பிடத் தக்கவராம். அவர்களுக்குத் தமிழது வலிமையைக் காட்ட வாய்ப்புக் கிடைக்கும் என்று நம்புகிறேன்,” என்று செங்குட்டுவன் கோபத்தோடு கூறினன். “செங்குட்டுவன் வாழ்க!” “சேரர் பெருமான் வாழ்க!” என்று படைவீரர் முழக்கமிட்டனர். செங்குட்டுவன் வடக்கு நோக்கிச் சென்றான்.


# 19. வடநாட்டில் போர்

செங்குட்டுவன் காலத்தில் தெலுங்கப் பேரரசு நடுஇந்தியா வரையில் பரவியிருந்தது. தெலுங்கு அரசர் செங்குட்டுவனின் நண்பர் கள். அவர்கள் செங்குட்டுவனுக்கு உதவி செய்தார்கள். அவர்கள் கொடுத்த பெரிய படகுகளின் உதவியால் சேரர்படை கங்கை யாற்றைக் கடந்தது. கோசல நாட்டின் வட பகுதியில் முன் சொல்லப்பட்ட—தமிழர் வீரத் தைப் பழித்துக் கூறிய கனகனும் விசயனும் வேறு அரசர்களும் செங்குட்டுவனை எதிர்த் தனர்.

புலிக்கூட்டத்தில் சிங்கம் பாய்வதுபோலச் செங்குட்டுவன் பகைவர் கூட்டத்தில் பாய்ந் தான். சேரநாட்டு வீரர்களும் பகை வீரர் களைத் தாக்கினர். இரண்டு படைகளிலும் இருந்த யானைகள் தம்முள் தாக்கிக்கொண் டன. குதிரைகள் தம்முள் போரிட்டன. வில் வீரர் வில்வீரரைத் தாக்கினர்; வாள்வீரர்வாள் வீரரை எதிர்த்தனர். போர் கடுமையாக நடந்தது.

யானைகள் துதிக்கையை இழந்தன. குதிரைகள் கால்களை இழந்தன; வீரர்கள் தலைகளை இழந்தனர்; எங்கும் பிணக் குவியல் கள் காணப்பட்டன; இரத்த ஆறு பெருக் கெடுத்தது; வெட்டுண்டு வீழ்ந்த யானைகள் மீது ஏறி வீரர்கள் போர் புரிந்தனர்; கழுகு களும் நரிகளும் காக்கைகளும் போர்க்களத் தைச் சூறையாடின.

பொழுது செல்லச் செல்லப் போர் கடுமையானது. செங்குட்டுவனும் சேர வீரர்களும் போர்க்களத்தில் முன்னேறினர். வடநாட்டு வேந்தரும் அவர்தம் வீரரும் பின்நோக்கிச் சென்றனர். போர்க்களத்திலிருந்த ஒவ்வொரு தமிழனும் மிக்க வீரத்துடன் போரிட்டான். செங்குட்டுவன் சபதம் தமிழ்வீரர் உள்ளத்தில் இருந்துகொண்டே யிருந்தது. அதனால்



அவர்கள் வீராவேசத்தோடு போர் புரிந்தனர். போரின் முடிவு யாது? செங்குட்டுவன் போர்க்களம் முழுதும் காணப்பட்டான்; அவனைக் காணக் காண, தமிழ் வீரர் உணர்ச்சியோடு போரிட்டனர்; பகைவரை முற்றிலும்முறியடித்தனர்; தமிழர் வீரத்தைப் பழித்து உரைத்த கனகனும் விசயனும் சிறைப்பட்டனர்.

கல்லில் உருவத்தைச் செதுக்குவோர் சிற்பிகள் எனப்படுவர். அவர்கள் ஒரு படையுடன் இமயமலைக்குச் சென்றார்கள்; கண்ணகியின் உருவத்தைப் பொறிக்கத்தக்க கல்லைத் தேர்ந்தெடுத்தார்கள். அதனைக் கங்கையாற்றுக்குக் கொண்டு வந்தார்கள்; கங்கை நீரில் அதனைத் தூய்மை செய்தார்கள்; பின்பு அக் கல்லைக் கனகன், விசயன் என்பவர் தலைகள் மீது ஏற்றினர். செங்குட்டுவன் அவர்களோடு தன் நாடு நோக்கித் திரும்பினான்.

பாவம்! கனகனும் விசயனும் தம் தலைகள் மீது கல்லைச் சுமந்து வந்தனர். அக்காட்சியைப் பல நாட்டு அரசர்களும் பார்த்தனர். 'தமிழர் வீரத்தைப் பழிப்பவர்க்கு இப்பரிசு தான் கிடைக்கும்' என்று கூறுவதுபோல அக் காட்சி இருந்தது.

வடநாடு சென்ற செங்குட்டுவன் வெற்றி முழக்கத்தோடு திரும்பி வருவதைச் சேர மக்கள் அறிந்தனர். அவர்கள் மிக்க மகிழ்ச்சியோடு தங்கள் அரசனது வெற்றியைப் பாடினர்; அவனை ஆங்காங்கு ஆலத்தி எடுத்து வரவேற்றனர். அதுவரையில் அவனைப் பிரிந்து வருந்திய அரசமாதேவி முகமலர்ச்சியோடு காணப்பட்டாள். அவளது முகம் அன்று மலர்ந்த செந்தாமரை மலரைப்போலத் தெளிவாகவும் அழகாகவும் இருந்தது.

## 20. பத்தினிக் கடவுள்

சிற்பிகள் இமயமலையிலிருந்து கொண்டு வரப்பட்ட கல்லில் கண்ணகியின் சிலையைப் பொறித்தார்கள். அதே சமயத்தில் அவ்வுருவச் சிலையை வைப்பதற்குக் கோவில் கட்டப்பட்டது. ஒரு நல்ல நாளில் குடமுழுக்கு விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. செங்குட்டுவன் பல அரசர்களுக்கு இதனை அறிவித்தான்.

குறிப்பிட்ட நல்ல நாளில்—நல்ல நேரத்தில் புதிய கோவிலில் கண்ணகியின் உருவச் சிலை நிறுத்தப்பட்டது. பூசைகள் சிறப்பாக நடைபெற்றன. மாளுவநாட்டு மன்னர், இலங்கை அரசனை கயவாகு முதலிய மன்னர் பலர் அவ்விழாவில் கலந்துகொண்டனர். கண்ணகியின் தோழியான தேவந்தி என்பவளும் அங்கு வந்திருந்தாள். அவள் கண்ணகி மீது அளவற்ற அன்புடையவள்.

பூசைகளின் முடிவில் அரசரும் பிறரும் பத்தினிக் கடவுளை வணங்கினர். அப்பொழுது வானவெளியில் கண்ணகியின் உருவம் தோன்றியது. அது ஆடை அணிகளால் சிறப்பாக விளங்கியது; "நான் இந்த இடத்தை விரும்புகின்றேன்; இந்த இடத்தில் தங்கி விளையாடுவேன். என் தோழிமாரும் வருக! என்னைச் சிறப்பித்த செங்குட்டுவன் நீடூழி வாழ்வானாக!" என்று பேசியது.

செங்குட்டுவன் மிகவும் பக்தியோடு பத்தினிக் கடவுளை வணங்கினான். பிற அரசரும் வணங்கினர்; "நீ எங்கள் நாடுகளிலும் கோயில் கொள்ள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர். "தந்தேன் வரம்" என்று அத் தெய்வம் கூறியது. செங்குட்டுவன் தேவந்தியையே கண்ணகிக்குப் பூசை செய்யும்படி அமர்த்தினான்; கோவிலுக்கு வேண்டிய நிலங்களை மானியமாக அளித்தான்; பொன்னையும் பிற பொருள்களையும் உதவினான்.

மாளுவ வேந்தர் செங்குட்டுவனிடம் விடை பெற்றுச் சென்றனர். அவர்கள் தங்கள் நாட்டில் பத்தினிக்குக் கோயில் எடுப்பித்தனர்; குடமுழுக்கு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர்; செங்குட்டுவனைப் போலவே அக் கோவில் விழாக்களுக்கும் பூசைகளுக்கும் தேவையான நிலங்களையும் செல்வத்தையும் வழங்கினர்.

கயவாகு வேந்தன் இலங்கைக்குச் சென்றான். அவனும் பத்தினிக்குக் கோவில் எடுப்பித்தான்; சிறந்த முறையில் விழாக் கொண்டாடினான். அவனது முயற்சியால் கண்ணகி வரலாறு இலங்கை முழுதும் பரவிற்று. இலங்கை மக்கள் பத்தினிக் கடவுளை மகிழ்ச்சியோடு வழிபடலாயினர்.

கண்ணகி ஒரு வணிகர் மகள்; கணவனையே தெய்வம் என்று கருதிய உத்தமி; தவறு செய்த அரசனுக்கு, அவன் செய்தது

தவறு என்பதை அச்சமின்றி எடுத்துக்காட்டிய வீரமங்கை; பல நல்ல குணங்களை உடைய பெண்மணி. இச் சிறப்பினால்தான் அவள் மன்னர்களும் தொழத் தகும் தெய்வமானாள். செட்டி மகளான அப்பத்தினி வரலாறே நெஞ்சை அள்ளும் *சிலப்பதிகாரம்* என்னும் காவியமாக மலர்ந்தது. அவள் திருப்பெயர் வாழ்க!

---

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001